பிசுமில்லாஇற்றகுமானிற்றகீம்.

இஃது

# சரீஅத்துமாலை.

காயற்பட்டணத்திற்பிறந்து
கீழக்கரையிலடங்கிய
செய்கப்துல் காதிறுலெப்பை
ஆலிமவர்கள்
பாடியது.

பாசிப்பட்டணம்
மாலிக்கீசாபுலவரவர்களாற்
பார்வையிட்டுச்
சிந்தாதிரிப்பேட்டை
நாராயணசாமிமுதலியா
ரவர்களாற்
றமது
பிரபாகரஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது:

௲அ௱ச௰௫-ஜனவரியீ-

191
1-74

பிசுமில்லா ஹிர்றகுமா னிர்றகீம்.

# இஃது

## சரீ அத்து மாலை.

காப்பு.

வெண்பா.

தக்கஇசுலாமுந் தவுகீது மீமானும்
ஒக்கமெகரிபத்து முண்டாகு - மிக்க
சரீஅத்து மாலைதனைச் சங்கையுடன் பாடுதற்கு
கஹீக்கத் தருள்பவனே காப்பு

கடவுள் துதி.

தொங்கல்.

எல்லாப்புகழையு முடையவன்று னிறையோனல்லாதுவே றில்லையே - சொல்லால்சலவாத்துஞ் சொல்சலாமுந் துய்யறசூலின்மேற்கிளையார்கள்மே- நல்ல அசுகாபி மார்கள்மேலும் நயமாயெந்நாளுஞ் சொரியில்லா இ-வல்லசரீ அத்து மாலைபாட வரிசைஇருடைய நீசெய்குவாயே (௧)

அல்லாசறகாக வனுப்பினதை அருமறுநபி வெளிச்சமாக-னல்லாநடப்பையுங் கதீதனி லெடுத்தேயுரைத்ததைத் தமிழ்ப்பாவைகீயால் - நல்லாரெல்லோரு மறியவேண்டி நவின்றேன் னிதுலைக்கோவையாக - வல்லானருள்பெற்ற காயல்நகர் வாழுஞ்செய்கப்துல்காதிறுவே (௨)

நூல்

அல்லா இடத்தில்தீனிசுலாமதில் - அறியத்தருமாறுநாலுபாதை சொல்லால்சரீஅத்துத்தறிக்கத்துவுந் துய்யகஹீக்கத்துமகரிபத்தும்-எல்லாஞ்சரீகத்திலடங்கியதால் எடுக்கவிதியாகும்சறகுதனே-நல்லசரீஅத்துமாலைதனை நவின்றேனிதின்படி நடப்பீர்களே (௩)

சரீஅத்தாவது நருல்சொல்லதாந் தரீகத்தாவது நருல்செயலாம்-கஹீக்கத்தாவது நருல்காலதாங் கக்கையறிவது நருல்சித்ரதாம்-பரீகத்தெனுஞ்சேகத்துக் கூட்டக்காரர்-பயனையறியாமற் சலிக்கப்போனார் - சரியொத்தபாதை தனில்நடத்தோர்சமதானறெப்பில் வா கிலாவார் (௪)

இனின் பொருளறிவழிப்படுதல் தினமும்வாடிக்கைக்கூடியாகுந்- தீனில் வழிகெட்ட திருவதுதீனிலாயிரத்தெழுநூறண்டும்- இனின்பதுல்தியிசுலா மீமான் திறமாத்தவுகீதுமகரிபாவுந்- இனையுடையவரிதுநாலையுத்திறமாயெடுப்பவர் மார்க்கமுள்ளோர் (௫)

நன்மையுளஇசுலாமின்பொருள் நாயனேவலில்வழிப்படுத
ல்-உண்மைகொள்வதும்விண்ணப்பமும் உள்ளபொருளிதானமா
ஞ்சருக்-தொன்மையுடையவனொருவனென்று துலங்கவறிவது
தெளதோகும்- வண்மையுள்ளமைச் செயல்சிபத்தின்வகையைய
றிவதுமகரியத்தே (௬)

கலிமாத்தொழுகையும்சக்காத்துநோன்பும் கச்சுமிசுலாமி
னெப்பதாகும் - ஒலிமாரானது சபூறுகொண்டும் உடையோர
ன்கலானிற்குப் பொருத்தங்கொண்டும்-அலிமாமனூர்சுன்னத்தட
ங்கலியும்அதுபுடன்பறுவடங்கலியும்- உலமாமுமினு மெய்த்து
வத்தார்ஒலியுமவர்கள்தா னென்றறியே (எ)

ஈமான்பறுலாறுஇறையைக்கொண்டும் இறக்கியவேதமலக்
கைக்கொண்டும்- கோமான்றசூல்மார்கள் ளொடுக்கத்துநாள் கொ
ண்டுமலதுட கற்பனையில்-ஆமான துமறிலாகாததும்அவனில்நின்
றமென்றறிவதுவும்-சீமானமியுல்லா ஜிபுரீலுக்குச்சிறந்தமணிவா
யாற்செப்பினரே (அ)

ஒன்றானதவுகீதின்பறுல் உள்ளமைச்செயல் சிபத்திசமை
ரெண்டாய்க்காண்பது இணையானதால் இதையொன் றெனப்ப
தவுகீதாகும்-ஒன்றென்றறிவது மிதுகளைத்தான் உண்மை றசூல்
மார்கள்சொல்லீமான் - கொண்டதுடனிது கலிமாவினிற் று
தாலையறிவது பறுலாகுமே (௯)

ஒருமைத்தெளிவின்மறுத்தபாத்தான்ஒன்றானவுருதும்மறி
வும் - இருமையில்லாத கலிமாக்கொண்டு இருமுற்றுநாவல் வி
ண்ணப்பமும்-பெருமையுடையோனைச் சல்புகொண்டு பிரிசமா
ய்ச்சகூது செய்வதுவும் - அருமையுடன்மிக வதிகதவா பதித்து
அமல்களைச் செய்தவர்க்கே (௰)

நல்லகலிமாவின் சறத்துநாலு நாவால்விண்ணப்பஞ்செய்
திறதும்-சொல்லிநிசக்கொண்டு முன்மைகொண்டுஞ் சொல்லப்
பட்டதிற் கலப்பற்றதும்- வல்லமுகலீம்தா னென்றைவிட்டால்
வணக்கமொருபோதுங் கபூலாகாது-இல்லையென்றது முன்டெ
ன்றதும் இரண்டுந்தவுகீதன் சறத்தாகுமே (௰௧)

ஈமானுகமிய மைத்துண்டுகேள் இருதயத்துடன் விண்ணப்
பமும்- நேமமாகவே அமல்செய்வதும் நியத்துக்கொண்டு அ
மல்செய்வதும்-கோமானபியுட [illegible]ன்னத்துக்குக் கொள்ளுநேர்
பாடாயிருப்பதுவும் - சீமானொனுக்கனி யுடையறசூல் செவ்வ
வாயிறாற்செப்பினரே (௰௨)

றெப்பைக்கொண்டு ஈமாய்கொள்வதில் இருநான்கு சறத்
துண்டதுகேள்- ஒப்பேவமையில்லாதவன்மேல்உவப்புவைப்
பதுமலக்குகளை- குப்புலைவப்பதும் நபிமார்களைக் கொண்டுவுவ

ப்பதும் சறுத்தில்மூன்றாந் - தப்புச்செயல்செய்த பகையதின்
மேற் சாருங்கோபமா யிருப்பதுமே (௰௩)

வல்லோனேவின ஏவலுக்கு வழிப்பாடதிலைந்தாம்சறுத்தா
ருமாம்- அல்லாவிலகின விலக்குகளை அகல்வதூஉமாறுஞ் சறுத்
தாருமாம்- நல்லோன் கிருபையை ஆசைவைத்தல் நாலுஞ்சறுத்தி
னிலழாவதாம்- பொல்லா அதாபினைப் பயப்படுதல் பொருந்
தும் சறுத்தினி லெட்டாகுமே (௰௪)

அன்னவிதாவினுங் கிருபையான ஆண்டோன்சிபத்துகளை
னைகளுமன்று முன்னே அல்லாவை யறிகிறது முற்றிமார்க்கத்தினெ
ன்றிதருள்-தன்னையறிந்தவனுயனையுந் தானேயறிவானென்றருளி
னதாற்- சொன்னதைப்பார்க்கிலிசுலாமிலே சொல்லுஞ்சலிமாத்
தான்கூற்றினதே (௰௫)

லாயிலாகயில் லல்லாவினில் லாவுக்குப்பொரு ளில்லையென்
றல்- நாயனல்லாது வேறேயொரு நாயனுமில்லை யென்றபொ
ருள்-தாய்தந்தைதமர் தானுமில்லைத்தனியனானவன் றனொருத்த
ன்- ஆய்மானமறிந் தோர்களெல்லாம் அவனைத்தவிரவே றொன்
றுங்காணார் (௰௬)

அல்லாதன்னக்குள்ள சிபத்துகளை அறிந்தோரவன்றனை மிகவ
றிவார் - எல்லாருமிதையறியவேண்டி எற்றமுளசிபத் திருபது
ண்டும்-இல்லாத்சிபத் திருபதுண்டும் இதிலொன் றுண்டென்றாற்
குயிர்விளையும்-நல்லாயமான சிபத்துமூன்றும் நாயன்செயலெ
ல்லா நற்செயலே (௰௭)

எல்லாசிபத்தையு மிமாம்கஸ்ஸாலி எஃயாஉலூமுத்தீன்கி
தாபிற்சேர்த்தார் - அல்லாமத்மாரூ நயிலுலெட்பை ஆலிமிதுக
ளைவெளிச்சமாக- நல்லார் அல்லாவை யறியவேண்டி நவமாவுரை
செய்தார் தமிழ்ப்பாஷையால் - கல்லாதகல்வி கற்றுணர்ந்து
மக்கையறியாதான் ஜாகிலாவான் (௰௮)

ஈமானென்கிறமரத்தின்கொப்பு எழுபத்தேழுண்டுமதுகக
புல் - ஈமானென்கிற கிதாபதிலே எழுபத்தேழுபா பில்சுகபுல்-
ஈமானென்கிற பாடத்திலே எவருமறியவே யெடுத்துரைத்தார்
ஈமானில்க்காயில் ஆறேழொல்லாயெடுத்து அதைக்கொண்டு அம
ல்செய்வாரே (௰௯)

ஈமானிசுலாமு மொன்றெனவே இறையோன் குறுகூனில்
இறக்கினதால்- ஈமான்தான் இசுலாமெனவே இறசூல் திருவுளம்
பற்றினதால் - ஈமான்விட்டவ னிசுலாமல்ல வென்றதாலன் மு
ஞமிக்காவான் - ஈமானுள்ளவன் முசுலிமாவான் இல்லாதவன்காபி
ராவானென்றார். (௨௰)

ஈமானிசுலாமிரண்டுண்டதில் இசுலாம்வழிப்பாடீமானு
ள்ளமை-ஈமானன்றியே வழிப்பட்டவன் ஈயாதத்துக்கபூலாகாதது
ஈமானமனுக்குச்சறுத்தானதால் ஈமானிசுலாமிதுள்ளதல்ல-ஈமா
னுவது ஒருசொல்லிலே இசுலாமில்வந்து புகுதுமென்றார் (உக)

ஈமானுவது கல்புகொண்டு இருதயத்துடன் விண்ணைப்பறும்-
ஈமான் இசுலாமாவது அந்தரெண்டுட னுறுப்பைக்கொண்டும்-
நேமமாகவே அமல்செய்வதும் நிதந்தான்சுவர்க்கத்துப் பதவி
யெல்லாங்-கோமான்கிருபையா லவர்களுக்குக் கொடுப்பானெ
னநபிகூறலுற்றார் (உஉ)

ஈமானமலிதற் கிடையிற்பதத்தோ ரிரண்டுவிதப்பந்தாலுண்
டதுகேள்- ஈமான்தொடரப்பட்டது அமல்தான் ஈமானைத்தொ
டர்ந்ததுதானென்று-ஈமானேமமா யிருக்குமமல் இறுக்களுத்
துடன்பட்டதாகும் ஈமானுறு எல்லார்பேரிலும் இறையவ
னமல்மூசிலிமுக்கே (உங)

ஈமானுடனேதான் சொனுங்கினது இசுலாமானபேர்குக்கு
ம்களெல்லாம்-ஈமானமலன்றி மகுபூலாகும் ஈமானன்றிய அம
ல்கூடாது- ஈமானுடனேதான் சுவர்க்கமுண்டும் ஈமானல்லாது
அமல் கொண்டல்ல-ஈமான் தவாயினுக் குரியதல்ல இனியதவாபு
நல்வமனுக்கென்றார் (உச)

ஈமான்தனை நீக்கப்படாது எல்லா அமலையு நீக்கப்பயத்
தா-ஈமான்கொடுஒழிப் யத்தாகாது எந்தஅமல்கொள்ளவிம் தழிப்
பதாகும் - ஈமானைவிட்டால்க் குபிரேயாகும் இதுபோலேயல்
ல அமலைவிட்டால் - ஈமானைக்கொண்டு நபிமார்கள்தான் இறை
யோனிடத்திலே காக்கப்பட்டோர் (உரு)

ஈமானைக் கொண்டு நபிமார்கள்தான் எல்லா மொத்துமை
யானபேர்கள் - ஈமானன்றிய அமலைக்கொண்டு எல்லாவிதப்ப
மூ மூண்டானதே-ஈமானுடையமூமீன்களுக்கு இசைந்தவடை
யாளமூன்றுண்டுகேள்- ஆமானபேச்சு ஊணுறக்கம் அதிகமாக்
காமத் குறைப்பதுமே (உசா)

ஈமானிசுலாமு நிறப்பமாகஇருக்கும்பேர்களுக்கடையாள
ங்கேள்-ஈமானிறைந்தபேர்கள்க்கைவிட்டுப் இகழ்ந்துதேன்மையி
ல்லாதிருப்பார் - ஆமானஇசுலாய்நிறைய அவனைப்படைப்பெ
ல்லாம் பிரிசம்வைக்கும் - கோமானேயல்லா தொருத்தலையும்
குறைச்சலில்லாதார் பயப்படாரே (உஎ)

ஈமானசலது எழுண்டது இறையைவுவப்பதும் நிசக்கொ
ள்வதும்- கோமான்பேரிலே சாட்டுதலும் குதாவைப்பயப்பா
டுமாசையுடன் - நேமமாகவே வெட்கிப்பதும்நெடியோன்க

ஸர்வுக்குப்பொருந்தலதும்- ஆமானதோழன் மூமீனுக்கு அறி
வாருமென்றருளிச்செய்தார் (௨௮)

ஈமானிற்பாதி சபூறேயாகும்ஈமானடங்கலுமெக்கினேயா
கும்- ஈமானையாளந் தொழுகையாகும் ஈமானுடையோனு
க் கமல்கோல்காட்டும் - ஈமானுடையோ னுக் காயத்தாகும் இ
னியபெண்பணைத் தலைமைமூன்றாம் - ஈமான்பிசகிப்போ யிரு
லேதான் இறுதிக்கடிசாகுந் தின்மைதானே (௨௯)

அடியான்செய்கிற செயல்களெல்லாம் ஆண்டோன்செய
லென்பார் செப்ரியாக்கள் - அடிமைசெயலென்பா ரெல்லாத்
தையும்அவர்தான்கூட்டத்தில்,கதரியாக்கள்-கொடுமைஇதுவொன்
று செயல்களுந்தான் குணமாசுன்னத்தை யுடையோர்சொல்வா
ர் - அடிமைசெயல்நாயன் செயலாகுதும் அடியான்பொருந்
தமுஞ் செயலுமாமே (௩௰)

ஆலமதிலுள்ள செயல்களெல்லாம் அவனுநாமுமாய்ச்செ
ய்வதற்கு- கோலமதிலுள்ள வுவமையறி கோனுந்தலையாரியு
ம்போலேயாம்- மூலமாய்மன்ன னேவினயின் முடிந்ததுதலை
யாரியினுந் - ஞாலத்திற்செயல் முடிவதெல்லாம் தனியோனும
வ னடிமையுமே (௩௧)

அடிமைசெயலுக்குஅத்தாட்சிகேள்அடியான்செயலுக்குத
வாபுண்டென்றும்-கொடுமைசெய்தக்கால் தாபுண்டென்றுங்கு
றஆனில்அல்லா வருளிச்செய்தான் - உடையோன்மட்டுக்குஞ்
செய்வதானால் ஒருவரும்நரகம்புகுதார்- கொடுமைசெய்தவ ன
ரகத்திலேகுடியாயிருப்பானென் றருளிச்செய்தார் (௩௨)

அகமியத்தினி லடக்கலுந்தான் ஆண்டோன்செயலாக இருக்
குமிலும் பகைமைத்தனமான செயல்களைத்தான் படைத்தோன்
செயலென்று லதபுகேடாம் - உகமையில்நாயைப் படைத்தோ
னென்று உடையோனைச்சொன்னலதபுகேடா- மகிமைபெறுவ
து வழிபாட்டிலே மௌலாபொருத்தமுமதிலேயென்றார் (௩௩)

அல்லாதனக்குள்ள சிபத்துகள்தான் அனேகமிண்டதி லறியவி
தி-எல்லாருமிதையறியவிதி இதையையறிவார்களதையறிந்தோர்-
சொல்லும்வாஜிபுமுன்டென்பதுஞ் சொல்லால் மூஸ்தகீலில்லை
யென்றும் வல்லோன்சிபத்துகளெல்லாத்துக்கும் வகையையறி
யாதார்வழிபிழைப்பார் (௩௪)

சிவனறிவுநாட்டந்தத்துவச்செவியின்றிக்கேள்வியார்வைபேச்
சு-ஈவனிதுவேழுமடியார்க்குஇரவலுடமையாமமானமுமாம்சா
வமுன்னமேயவனளவிற்சாட்டினுரெல்லாமவாசிலாரே-ஆவி
விடும்போது அவனைவருத்தான் அல்லாஅளவிலேசாட்டுவாரோ. ()

தக்கசுரூத்திலித்பறுது சஜும் தருத்தியாகவே சுறுத்துகளும்- ஒக்கவிற்பேசிவத்தகளுல் ஒன்றுநாளிதிற்சொல்லவில்லை-கக்கையறிந்தோர்களிதுகளோத்தான் கவலாதிருந்தாலுமதிர்துகொள்வார்-பக்காஆலிமாம் சாறுலெப்பை- பயங்கொளும்படி பகர்ந்தனரே.

மார்க்கத்தனிதுள்ள காரியங்கள்மறக்காமலிதைப்பாடமிட்டு- நேர்க்கமாய்ச் சாறுலெப்பை ஆலியும் நிறம்மாகஅதைப் பாட்டாக்கினார்- பார்க்கப்படிக்கவே நாடினோர்க்குப்பாடினபாட்டு அடங்கலையும்- சேர்க்கச் சொல்லியே எல்லாத்தையும் சேர்த்தார் அருமதிலெப்பை ஆலிம் (௧௭)

நாவால்கலிமாவைச் சொல்லுவதும் நல்லமம்ஃநாவையுண்மை கொண்டு ஏவப்பட்டதை எடுப்பதுவும் ஏறுக்குமத்தைத் தவிருவதும் - பாவமென்றது விலகலாகும் பாரில்வணக்கங்களேவலாகும் - சாவமட்டுக்குஞ் சறுகாமலே சறகையெடுப்பது சரீஅத்தாமே (௧௮)

உண்மைவிட்டவன் முனாபிக்கவன் உடலிற்றலைபோன உறுப்பைப்போல- தன்மைவிட்டவன் பாசிக்கவன் நறுக்கப்பட்டமற்றுறுப்பைப்போலே- இன்மைசெய்தவன் காலகாலம் தீப்பாய்நரகத்திற் கிடைக்கமாட்டான்-வன்மைநபியுல்லா சபாஅத்திலேவந்துசுவர்க்கத்திற்புகுதுவானே (௧௯)

உண்மையுடையோனுக் கடையாளமாம் உடையோன் கலாவுக்குப் பொருந்துவதும் நின்மைபலாயின்மேல் சபூர்செய்வதும் தினமும்அல்லாக்குச் சுக்கூர்செய்வதும் - நன்மைசதக்காவுந் தொழுகைநோன்பும் நல்லமுமினுக் கடையாளமாம்- செம்மையசுகாபி மார்க்களுக்குச் செல்வநபியுல்லா செப்பினரே (௨௰)

வார்த்தைப்படாதுமாறுதலும் வாக்கிற்பொய்களைச்சொல்லுவதும் - மாற்றஞ்சவமானஞ் செய்வதுவு மடையன்முனாபிக்குக் கடையாளமாம் வேற்றுமையானகாபிரவன் வெளியில்முசுலிமாயிருக்கினும் - ஊற்றைப்பிணமான நரகத்திலேஊழிகாலமுங்கிடப்பானென்றார் (௨௧)

நெஞ்சுவிதியாம் இசுலாமுக்கு நிரம்புமொளிவாகு மடையாளங்கேள்-பஞ்சைத்துனியாவின் வீட்டிலுள்ள பலனைவெறுப்பதுமாகிறத்திற்- கொஞ்சியிருக்கவே விரும்புவதும் கோமான்மவுத்துவந்திறங்குமுன்னே- அஞ்சித்தொழுதழுதனுதினமும் அதற்குஆயுத்தப்படுவதுமே (௨௨)

அஞ்சுகாரியமில்லாவிட்டால் அடங்கலும் சாலிகாயிருப்பார்- மிஞ்சினதைக் கொண்டு பசிவனைமூ மேட்டுத்தனங் கொண்டு பொருத்துவதும்- கொஞ்சத்துனியாவின் அவட்சையுடன் கொ

டியமுகத்தாழ்ச்சி யகப்பெருமை- மொஞ்சாகிய அலியாரினை மொழிந்தாருலகத்தாரெல்லார்க்குமே (௪௩)

மூழ்கிப்புத்தனிப்படிவாய் மூழ்தலுமண்டபசியினு நாலுங் கொண்டு - பழிப்புவந்தாலும் பயப்படாதோர் பாரிலவுலியா அப்தாலாகுர்-செழிப்பாகநாளை அவர்க்கத்திலே சிறப்பாக இருப்பாரெனவே- களிப்பாமறிவுள்ள ஏகுசென்பவர் கருணையாயிதையெடுத்துரைத்தார் (௪௪)

நாலைக்கொண்டுதான் பலாயிலாவான் நபுசும்இபுலீசு மனித்ர்துனியா - காலையிலுநாலும் பெறவொட்டாது காரிதினை விட்டுங்கலாசாக்குவாய்-நாவிலிருசிரு அல்குலாயில் நவன்றுர்செய்துத்தீங் மருநாமென்போர்-பால்போல்லகல்பை யுடையோரெல்லாம் பலகிதாபிலும் பகர்ந்தனரே (௪௫)

இல்முக்குத்தலை தீர்மானமும் இல்மில் அமலிலுந்தெளிவறிவாய்- இக்முக்குத்தலை அல்லாவறிதல் இல்மில்த்தீர்மானஞ் செவ்வுதல் இல்மில்த்தெளிவது தெனகிதாகும் இயாதத்திலது கலப்பற்றதாம்-இல்மிலிருதாலுந் தொகைபோலாகும் இல்மையுடையவரறிவார்களே (௪௬)

கூட்டக்காரரில் பிதுகத்துள்ள கூட்டமெழுபத்திரண்டறிய-நாட்டமுள்ளபேர் பயானுத்தினை நாடிப்பார்த்தோர்க்கு வெளிச்சமாகும் - நோட்டங்கொண்டிமெ சாயிலுத்தின் நோக்கிறுந் போதும் ஆலிமுக்குத்- தேட்டங்கொண்டுதின் பார்த்தறியார் திடனுய்க்கூட்டத்திலாயிருப்பார் (௪௭)

மார்க்கத்தனிலுள்ள காரியங்கள் மசாயிலுத்தினிலதிற்சிலதைச் - சேர்க்கநாடியே சேர்ந்தத்தற்பின் செய்யிறுஅலி சகிதுக்கிறார் - பார்க்கநாடினபேர்களுக்குப்பலதிலுபிதுபோதுமெனத்- தீர்க்கமாகிய செய்குஅலி செய்யிதுஅலி யும்முறைத்தார் ()

அல்லாயிறக்கிய குறுஆனிலே அல்லார்பேரிலும் பறுலென்பது - எல்லாருக்குத்திலும் பறுலாக்கினுன் எடுப்பவர்க்குத்தான் சிறப்புண்டாகும்- பொல்லாப்பாசிக்கு இதையறியான் பொருந்தவு மாட்டான் ஜாகிலாவான் - நல்லாரெல்லாத்தையு மறிவார் நன்மை மிகச்செய்து அவர்க்கஞ்சேர்வார் (௪௯)

எல்லாருமிதை யறியவேண்டி எங்கள்செய்குட பிள்ளைகளில்-நல்லஅருமருக் கண்டுலெப்பை நாட்டங் கொண்டிதைப் பாட்டாக்கினுர் - வல்லமுகமீம்களிதையறிந்துவணங்கவேணுமெல்லாநாளிலும் - அல்லாவே யெல்லார்க் கும்முதவி அனுதினஞ் செய்வாயாறகீமே (௫௰)

எல்லாருந்தினை யறியவேண்டி எடுத்துரைசெய்தேன்யா
னுந்தினை - நல்லார்கழிப்ருசம் மதுமனாக்கார் நவின்று வரை
செய்யவேணுமென்றார் - இல்லாதிருக்கிலோ கியாமத்திலே இ
றையோனிடத்திலே வழக்காடுவோம்- அல்லாவேயெனக் கும்ம
வர்க்கும் அதிககிருபைசெய் யாறகிமே (௧௧)

சொல்லுங்கலிமாவி னுனுக்கமொன்றுசெய்றசூலுக்கினில்
வெளிச்சமாச்சு - அல்லும் பகலுந்தான் திக்றுசெய்தாலும் அத
னையறியாதோர் திக்றுகூடாது - இல்லல்லாவிலும் லாயிலாக ஏ
யாய்மொழிவது கதாவானதால் - எல்லாமனிதருந் தொழுகை
யிலே இய்யாக்கவென்று லதுபோலாமே (௧௨)

அப்பா மாரிகளில் சதக்கத்தில்லா ஆலிமவர்கள்தான் திரு
த்தினதைத்-தப்பாமற்சொல்ல அறியாதவன் தெளகேதொருபோ
அந்துரிஸ்தாகாது · ஒப்பாங்கலிமாவிலோரெழுத்து உலகத்தா
ர்க்கெல்லா மறைந்துபோச்சு றெப்பாகிலுமவன் வேதத்திலே
றெசூலாகிலுமொழி யாத்ததுவே (௧௩)

எல்லாமுசக்பிலுங்கிதாபிலேயும் எழுதப்பட்டதிரண்டுலா
மே-அல்லாகூவென்ற வெழுத்தைப்பார்த்து அறிந்தபேர்க் கெ
ல்லாந்தெரிந்ததுபோற்- சொல்லாமல்வேறே யோரெழுத்தைச்
சொல்லச்சொன்னபே ரொருதருந்தான் - இல்லாமலதை மறு
வெழுத்தாய் எப்படிமொழி வாயுரையே (௧௪)

அறபுநாட்டினி லிருபேர்வந்து அப்பாவுடனேதான் தர்க்
கித்தார்கள்-சிறப்பானஅப்பா கேள்விக்கெல்லாம் ஜெவாபுசொ
ன்னார்கள் ஒத்துக்கொண்டார்- அறப்பானகாரி யம்மதுதால் நு
லக்குங்கேட்போரெல் லாருக்குமே- வெருப்பாகுமிதை யறியா
தவர்வெருவாய்த்தர்க்கங்கள் கொடுப்பார்களே (௧௫)

அப்பாசொன்னதைக் குற்றஞ்சொன்னோன் அவர்களைக்குற்
றஞ்சொன்னவனும்- அப்பாவிமாம்மகளைக் குற்றஞ்சொன்னோ
ன் அவர்களுங்குற்ற வாளியாவார் - குப்பானவர்களுக் கடையா
ளங்கேள்குற்றமன்றியே தொடர்ந்து ஒன்றும்-செப்பாமல் நட
ந்தோருக்கெல்லாம் செல்வமவர்களுக் கென்றறியே (௧௬)

நன்மையானதைச் செய்கிறவன் நல்குணத்தையுங்கொள்ள
வேணும் - இன்மையானதை விட்டவன்றான் தீக்காணகுணந் த
விர்வேணும் - வண்மையாகவே குலாசாவிலே லைத்தாக அதை
க்கோவைசெய்தேன் - உண்மையுடைய மூமீன்களிந்த ஒருவி
தாலைப்பார்த் தாற்போதுமே (௧௭)

நல்லார்பொல்லார்க்கு முள்ளஅமல் நற்குணங்களுந் துற்
குணமும் எல்லாம் சவுகறான் விலாமதிலே எடுத்துஎழுதினேன்

ரெண்டோபாயில் - வல்லமுளவீங்கட் கிறபோதுமே வணக்கத்தை
நாடி இஸ்படித்தால்- பொல்லாமுறுபிக்குயாகிக்குப் போ
தாதாயிரங் கித்தாபுதானே (௨௮)

சங்கையாகியகுணங்களைக்கேள் சாரீத்து நடப்பது முறி
த்தோலங்ஙனைப் - பங்கமாயனி யாயஞ்செய்தாற் பகரஞ்செ
ய்யாமற் பொறுப்பதுவும் - ஈந்துமுன்பேறுகெடுத்தோனுக்கு
இரங்கிநீகொடை கொடுப்பதுவும் - தங்கமாகிய குணமுடைய
சய்யிதுல்அம்பி யாமொழிந்தார் (௨௯)

அல்லாதனக்குள்ளகுணமுந்நூறு அதனிலொருகுணங்கொ
ண்டவர்க்கு - எல்லாசுவர்க்கமுங் கிடைக்குமென்று இறசூல்திரு
வுளமானதுகேள் - எல்லாக்குணத்திலும் வலுப்பமான இறைய
வன்குணங் கொடையாமென்று - நல்லகொடையாளி நாயன்
றோழன்நட்டப்பகையாளி பகிலனென்றார் (௩௰)

மணக்குங்கலாலது தேடித்தின்றால் வணக்கங்கபூலாகுமந்
தத்தேட்டம் வணக்கம்பத்திலி லொன்பதென்று வரிசை நபியு
ல்லாமொழிந்ததனுற்-கணக்குக்கேட்கிற நாளையிலே கடிசாமதா
புதான் கறுமைத்தின்றால் -இணக்கமாய்கலால் தின்னச்சொல்லி
இறையோன்குறஆனி லருளிச்செய்தான் (௩௧)

எட்டுக்காரியங் கொண்டுஅமல் இறையோனிடத்திலே செ
ல்லாதது -கெட்டமுகத்தாட்சி பெருமைபுறங்கேடுமகம்பொறு
மைகிருபை-விட்டுப்போறதும் பிரோசனைத்தை விரும்பிக்கேட்
பதும்பெறுகாமையும் - ஒட்டுக்குஇதைத் தவிரவேணும் ஒருவ
ன்பார்ப்பது கலப்பற்றதே (௩௨)

ஏழுவானத்தி லேழுகாரியம் எழுமலக்குகள் பாரித்திடுவா
ர்-நாள்வழியெல்லா மமல்செய்தாலும் நாயனிடத்திலில் கபூலா
காது - தோழமார்களே இதுகளைத்தான் தொடாமலமல் செ
ய்யவேணும் - ஏழைநானிதைச் சொல்லவில்லை இதுகள்கிதாபி
லே வந்ததுவே. (௩௩)

வணக்கங்களைப்பத்துப் பங்குவைத்து வாயைமூடுதல்பங்
கொன்பதாம் - இணக்கமாகிய ஆபியத்தி லொன்பதுபங்கு அ
திலேயாகும் - பிணக்கங்களில்லை வாய்மூடலிற் பெரியோர்கள்
குண மிதுவேயாகும் - குணக்கேடாம்பத்துப் பத்தொன்பது
கொடிய வாயினால் வருமேயென்றார் (௩௪)

பொய்யுந் தர்க்கமுங் கெட்டபேச்சும் புறமும்வழக்குங்
கோள்முனிறதும்-வையகத்தனி லிரண்டுநாக்கு மனிதனும்வீ
ணில் ராகங்களும் - ஐயமாகிய வீண்பேச்சுகள் ஆகாட்பரியாச

மடிப்பதுவும் - மெய்யானசிபத்துகள் கலாமைத் தொட்டு மே
ட்டுமைகேட்பதுமே (௬௫)
வீண்பேச்சில்மூங்கிக் கிடப்பதுவும் வேண்டாக்கருமத்தை
ப்பேசுவதும் -பேறுதலன்றி மறதியாகப்பேசுவதும் பேச்சை
ப்பொறுப்பிப்பதும் - வேறுமாகிய நாயன்சிற்றை வெளியி
லெல்லார்க்கும் பாத்துவதும் - ஊனுதலாக விறையோனல்லா
தொருதன்பேரிலே புகழ்வதுமே (௬௬)
கேள்விகணக்கின்றிச் சுவர்க்கஞ்சேர்வார் கேளீர்நிலாறு கூட்
டத்தார்தான்-தாழ்வுபலாயின்மேல்சபூர்செய்வோரும்தனியோ
னன்னைத்தானுவந்தபேரும்- நாள்களிலெல்லாம்வணங்குவோரு
ம்நாயனுக்காகச் சமர்செய்வோரும்- ஆளிலொருவரந்நீதத்துக்
கு அதிகபொறுமையா யிருப்பதுமே (௬௭)
எழுகூட்டத்தாரிறையவன்றன் னிழலில்கீழேதான்விற்றிரு
ப்பார்-வாழும்ராஜாவில்நீதவானும்வாலிபத்தினில்வணங்குவோ
னும்-நாள்களிலெல்லாம்நாயன்றன்னை நாடியதிக்றுசெய்தவரு
ம்-வேளையிலெல்லாமொருத்தன்மனமேலோன்பள்ளியைக்கொ
ளுகிறனே (௬௮)
வல்லவொருவர்க்குச் சதகாச்செய்தால் மறைவாக அதைக்கொ
டுப்பவனும்-நல்லமனிதரிரண்டுபேர்கள்நாயன் கருமத்திற்சே
ழமாரும்-பொல்லாதவளொருத்தனையழைக்கப்பொருந்தாநாய
னைப்பயப்பட்டோனும் எல்லாருமதாப்பயிம்வேளையில் இவர்க
ளறுவின்கீழிருப்பார்களே (௬௯)
ஆறுகூட்டத்தாரீ மன்றூட்டமூன் அவர்கள்சுவர்க்கத்திற்புகு
துவார்கள்-பேறுபெற்றநன்னீதவானும்பேறுதல்கொண்டுகொ
டையீவோனும்-தேறுதல்கொண்டு வாலிபத்திற்றெளிர்ந்தக்வா
லைச்செய்தவனும்-பாறுள்ளசாகிறின் குணமாம்பகேறுஆமிதஇ
வர்களாமே (௭௰)
நல்லசுவர்க்கத்தையுடையோனுக்கு நாலுகாரியமுண்டது
கேள்-அல்லாதனைக்கஞ்சிப்பயத்தகல்பும்அழகாய்க்குளிர்ந்தசொ
ல்தன்முகமும்-வல்லமனிதர்க்குங் கொடைகொடுக்கும் வரிசையு
ள்குணமிதுகள்நாலும்- எல்லாசுவர்க்கத்தையுடையோனுக்கு இ
துவேஅடையாளமெனவுணர்ந்தார் (௭௧)
பொல்லாநரகிற்புகுதுவோர்க்குப் பொருந்தாததிலொன்
றாமிரக்குமாற்றம்அல்லாமல்வேறேயில்லையென்றுஅருமதுநமி
மொழிந்ததுகேள்-அல்லாதனைக்கஞ்சித் தருவாச்செய்யான் அழ
காய்க்குளிர்ந்தசொல்முகமுமில்லான்- எல்லாநேரமுங்கொடை
யையீயான் இறையைநாளீறுத் திக்றுசெய்யானே (௭௨)

இதேவியானபேர்களுக்குச்சிறந்தஅடையாள மூன்றுண்டு
கேள்-எதாகிலுமொழிவனத்தின்பதானல்லாக்கலாலாகஇருப்பது
வும்-ஒழினைஉலமாக்களுடன் உவப்பாயெப்போது மிருப்பதுவு
ம்-ஆதிநாயனைத்தொழுகிறதில்அடவாயிமாருடன் றெழுவதுவே
மூதேவிதனக்கடையாளங்கேள் மூன்சொல்கிறதேவி தனக்கு
மாத்றம்-எதாகிலுந்தின் மூல்சருமைத்தின்பால் எப்போதுமாவி
முடனேயிரான்-ஆதிநாயனைத்தொழும்போதெல்லாம் அவனுத்
தனித்துத்தான் றெழுவானென்று-மேவதாம்பாலநபியிறசூல்வி
ண்டாரும்மத்தோ மெல்லார்க்குமே (௭௫)
அதிந்தஆரியுக்கடையாளமாம் ஐந்துகாரியமுண்டதுகேள்
சிறந்தவணக்கமும்தாட்சிணையும் சேர்ந்தநற்குணம் புவிவெறுப்
பும்- மிதிந்தஉள்ளச்சமிர்தவைத்தும் டேறுதோன் துல்யா உல
காவாகும் எதிந்தஇபுலீசுமிவர்களுக்தான் இணையாமெனசாமியி
மாருரைத்தார் (௭௬)
ஆலத்திலுள்ளமனிதர்கள்தான் அறியுங்கள்நாலுவகையுண்டது-
கோலத்திலொன்று போலாறுஇங்கொடியபாசிக்குப்சாலிகுமா
ம்தாலத்திலுள்ளஒலிமார்களும்தவத்திலுயர்ந்திடுநபிமார்களும்-
சீலக்குணத்திலுல்தால்வணாயும்செவ்வொத்திருபதாலேயறிவாய்
நல்லசாலிக்கடையாளங்கேள் நாயன்சொற்படியே நடப்
பார்-பொல்லாப்பாசிக்குஅவர்க்குமாத்றம்பொறுக்கான் பகைத்
திற்கடப்புச்செப்வான்-கல்லாருக்காசுக்கொடுக்கின்றவன்சமியுல்
லாவென்றார்நபியிறசூல்-அல்லாதனக்காகக்கொடாதவன்றான் அ
வனும்பகையனென்றுருளினதால் - எல்லாருங்கொடைகிலது இ
றையோன்றனக்காகக்கொடுக்கவேணும்பொல்லாயனிலனுக்கடை
யாளந்தான் பொருத்தமாகவேகொடாதவனே (௭௭)
பாவத்தைவிட்டுமீண்டோனுக்குப் பகருமடையாளமூன்று
ண்டுகேள்- ஆவலாகவேயதினின் பேரில்அவட்கைவைப்பதுன்னை
சேதமும் - ஏவலானதை யெடுப்பதுடன் எல்லாப்பாவத்தைத்
தவிருவதும் - காவலாகிய கமிபிறசூல் கதிதிலிதுசனோத் கவலலுள்
ந்றார் (௭௮)
நற்குணமான அமர்தியான நல்லார்க்கடையாள மூன்றுண்
டுகேள்-தற்குணமான மாறநடை தோசியுடன்சேர்ந்து நடப்
பதுவும்-தற்குணங்கொண்டு கொடாதோனுக்குத்தானேகொடுப்
பதும் தயவுகொண்டு - சற்குணமில்லா அத்தீதத்தைச் சார்ந்து
துவாச்செய்வதுமூன்றுமே (௭௯)
மூனுகாரியமனிதரிலே மூகத்தாழ்ச்சியானோர்க் கடையா
ளங்கேள்-பேணுத்தொழுகையில் துக்கூவுசுருத் பேணுதலன்றித்

தொழுவதுவும் - நாணிமனிதருக் காகவேண்டி நல்லாத்தொழுவ
துத்தனித்தபோது - வேனும்வணக்கங்க ளெல்லாத்தையும் விட்
டுநாயனை மறப்பதுமே (௮௰)

தீங்கையுடையோனுக்கடையாளங்கேள் இறக்கேமமல்செ
ய்கிறதிற் பாக்காயமல்தன்னை யிறக்காததும் பாவங்கள்தன்னை
மறப்பதுவும்-தீங்கிலாசாலி கடையாளங்கேள் தெண்டிப்பாறி
ல்லா அமல்களிலும்- நீக்குந்துணிபாவைத் திருத்துதலும் நித்த
மனிதருக்கிணக்கமுமே (௮௧)

மெத்தவுமுன்மைகொண்டோனுக்கு மிகவுமடையாளமூன்
றுண்டுகேள் - ஒத்தவணக்கத்தைச் சதக்காத்தன்னை உண்டாமுசி
பத்தை மறப்பதுவும் - கத்தன்கோபத்தை நூற்றுப்போடுங் கல்
க்குக்காணமற் கொடைகொடுத்தல்-சுத்தவணக்கத்தை மறைப்ப
துதான் துய்யகலப்பற்ற இஸ்லாசாமே (௮௨)

முகத்தாழ்ச்சியில்லா தோர்தமக்குமூன் றுஅடையாளமூண்
டதுகேள் - அகத்திலாசையை பவன்புகழை அழகாய்முதல்தனை
வெறுப்பதுவும் - முகத்தாழ்ச்சிதன்னை யிணையுடனே முகம்மதுந
பிசரியாக்கினார்- சுகத்தைப்பெறுவார்கள் சுவர்க்கத்திலே துய்ய
அமல்களைச்செய்தவரே (௮௩)

கொடையை உவப்பதுங் கொடுப்பதுவும் ஞுதறத்துள்ளவ
ன்பொறுப்பதுவும் - உடையோனுவப்புள்ள கொடையாளிக்கு
ம்ஒலிமார்க்கிதுமூன்று அடையாளமும் - அடியார்தங்களிற் பி
ழைபொறுத்தால் ஆண்டோன்பொறுப்பார்க்குப் பொறுப்பா
னெனும் - நெடியோன்குணத்திலிற் கொடையானது நிறைந்த
குணமென் றநபிமொழிந்தார் (௮௪)

பொல்லாபகிலனுக் கடையாளங்கேள் பசியாய்க்கேட்போ
னைப் பயப்படுத்தல் - நல்லாசோபனம்வந்தோனுக்கு நயந்து
சொல்லாம லிருப்பதுவும் - வல்லவொருவர்க்குக்கொடைகொடு
த்தால்வஞ்சமாய்ச்சொல்லிக் காண்பிப்பதும்-எல்லாநேரமுங்
கடுகேட்புஇறையைசுக்குர்செய்யாதிருப்பதுமே (௮௫)

மூன்றுகாரியங்கொண்டுஅமல் முனைச்சையாகவே செய்
தேயல்லால்- என்றபட்டுக்குமமல்செய்தாலும் இறையோனிட
த்திலேபலன்கொடாது-தான்றதுனியாவைவெறுப்பதுவும் சகல
தோய்வினை தவிருவதும்- என்றராஜாவின் றொழுகையை இசைந்
து இருப்பதுமிதுமூன்றுமே (௮௬)

பாவினக்கு மூன்றடையாளங்கேள் 'படைத்தோனதாபி
னுக்கஞ்சாததும்- எவினதுக்குமாற் றஞ்செய்வதும் இறையோ
ன்மேலாசைமுறிவதுமே - பொய்யையுடையோனுக் கடையா

ளங்கேள் புகலுமவன் சொற்சற்காயிப்பதும்-மெய்யன்றிப்பொ
ய்யைக்கொண்டுமவன் மேவுதலும்பொய்யைச்சொல்வதுமே( (

உண்மைத்தோழனுக் கடையாளங்கேள் உன்னு ஜிற்றைப் பேணுவதும் உண்மையாகவேஉன்முதலை உவன்றன்முதலின் ஜெமமாக்குவதும்- தன்மையாகவெ அவன்மானத்தைச் செய்வாயது போலே யாக்குவதும்-நன்மைவிளையுநற் றோழனுலே நாயனிடத்திற்மன்றுடுவாரோ (௮௮)

அனியாயக்கார னடையாளங்கேள் அவனிற்றுழ்ந்தோனைச் சாட்டப்படும் - அனியாமனிதர்கள் முதல்பாராட்டான் தோசிபதிலேயும் சமானமானவன்- சனியம்பிடிக்குமேயொமத்திலேசகல அமல்யு மிழந்திடுவான்-பனியாதமக்கள் எல்லாருக்கும்வரிசைநியுல்லாசெப்பினமோ (௮௯)

பத்தியுடையோனுக் கடையாளங்கேள் பொருந்திச் சபூர்செய்வான் பகாயிக்பேரில் - வெற்றித்தன்யாவிற் றன்மையுமாய் வெறுப்பைப்பொறுப்பது மிதுமூன்றுமே - நித்தப்பெரியோர்ளைச்சங்கைசெய்வான் நெறிநீதங்களிற் பிசகமாட்டான்-சற்றோர்களைக்கண்டாலாசாரமுங் கருணையொடுமனைப் பிரியமாவான் ()

அல்லாவைக்கோபமானதுக்கும் அவன்மெலுவப்புக்கு மடையாளங்கேள்- எல்லாநேரமுந்திக்றுதன்னை எடுப்பதுமதை வெறுப்பதுவும் - பொல்லாதபார்வி மறந்தவன்றான் புகழ்ந்து திக்றுள்ளோன் வழிப்பட்டவன் - நல்லாரல்லாவைதிக்றுசெய்து நாயனிடம்பாருஞ்சாட்டுவாமோ (௯௧)

கசட்டுக்காரனுக்கடையாளங்கேள் கண்டவேளையிலுவப்புவைப்போன்-உசத்தியாகவே பேசினவன் உடனேபோனபின் புறம்பேசுவான் - அசட்டையுடையவ னல்முள்ளோர்க்கு ஆபத்துவந்தால் மகிழ்ந்திருப்பான்- இசைத்த விதுமூன்று முனைவர்க்கு ஈமான்பரிபோருமெனவுரைத்தார் (௯௨)

நீதமில்லாதபாசிக்கிக்கு நிசமாமடையாளமனிதனாஅந்-நீதஞ் செய்வதும் பறுலுகளை நேடிஜிலுய்விட்டு இருப்பதுமே ஆதமக்களில் சாலிஹீன்கட் கடையாளமிதின் மாற்றமாகும்-போதமாஐபெரியோருக்கும் பொருந்து மடையாளமிதுபோலாமே()

வணக்கத்திற்கொண்டு வகையுண்டுகேள்வளரும் வெளிரங்கமானதொன்று-இணக்கமனதினிலமைந்ததமற்றதுன்றொங்கமான வணக்கமொன்று - கணக்காசுநாய னேவினதைக்கண்டு அமல்செய்தால் வெளிரங்கமாம்-புணர்க்கும் வல்லவன் சொல்களெல்லாம்பொருந்திக்கொள்வது உள்ளொங்கமே (௯௪)

வன்னெஞ்சானோருக்கடையாளங்கேள்மனதிற்கிருபையை
யிழப்பதுவும்-தன்னெஞ்சிற்போது மாகாத்ததும் தனியோனு
றுதிகள்பலன்கெடாதே-என்றுந்தன்னடக்கையினைவிடா ரிறைவ
ன்கற்பனைக் கனுசரியார் - முன்னிலுள்ளவர் சொல்லைப்பேறூர்
மோசமாகிய வன்னெஞ்சமே (௯௫)

குணங்களில்நபி மார்கள்குணங் கோடிப்பலாய்ப்பி ரோவினைக்
கு- மணமாகச்சபூர் செய்வதுவு மனுடரிற்பலன் கெட்டோனுக்
குக் குணமாயுதவிகள் செய்வதுவும் குறித்த அயலைச்சேர்ந் திரு
ப்பதுவும்- மணமுள்ளோரொளி யோர்களெல்லாம் பலருமிகு
ணங்கொள்வீர்களே (௯௬)

ஒலிமார்கள்குண முரைக்கக்கேளீர் ஒருத்தனைந் நீதம்தமக்குச்
செய்தால் - கலிமா அகமிய மறிந்ததனாற் கல்க்குகளைத்தொட்டுப்
பொறுத்துக்கொள்வார்-பெலமாயிருந்தாலுந்தஞ்செய்வார்பெ
ருமைந்தனமாக நடக்கமாட்டார் - அலிமா முலையுண்டோர்குண
ங்கொண்டோர்கள் காமிலாகியஒலியாருமே (௯௭)

இன்னமவுலியாகுணங்களைக்கேள்என்னகுற்றமுந்தமக்குச்செ
ய்து - முன்னைவந்துகன் னழிவுசொன்னால் முறையாய்ச்சபூறு
செய்துவந்திருப்பார் -சின்னமனிதனுயிருக்குகிலும்சேர்ந்தபெ
ரியோராயிருக்குகிலும் - அன்னைபிதாவிலு மதிகமாக அவர்கள்
பேரிலேகிருபைவைப்பார் (௯௮)

இன்னங்காமிலுக் கடையாளங்கேள் இருதயத்தினில் நாலுஞ்ச
ரி - பொன்னைப்பணத்தைத் தான்கொடுக்கிறதும் பொருளையா
தொன்றைக்கொடாததுவும் - சின்னமாகிய தன்மைகளும் சேர்
ந்ததால்வந்த சிறப்பதுவும் என்னமாகிலும்வந்ததானால்எல்லாஞ்
சரியாகக் காண்பார்களே (௯௯)

அகத்திற்காமிலும் வெளியில்லாமற்றும் ஆகயிருக்கின்றோன்கு
ணங்களைக்கேள் மிகுந்துதின்பது மிகுந்தபேச்சமிகுந்துசத்திய
ம்செய்வதுவும்-இந்தபரியாசமடிப்பதுவும் எல்லாவேலையுஞ்சி
ரிப்பதுவும் உகந்துஇதுகளைச்செய்தவர்கள் உண்மையாயமுவர்
னுபிக்கென்றார் (௱)

துனியாவையுவந் திருப்பதுவும் அய்யஆகிற மறப்பதுவும்
அநியாயஞ்செய்யு மனிதனையும் ஆனையும்பயப் படுவதுவும் இ
னியவாழ்வுள்ளோர் கொடுக்கிறதில் இடையில்மிடிமையிற்பயங்
கரமும்- பனியாதமக்களிதையுவத்தால்வரிலைசயிலமல்பலன்கொ
டாதே (௱௧)

உகப்பானபேர்கள் மவுத்தாவதும் உண்டானபேர்கள்போ
குதலும்- நகைப்பாய்ச்சாமர்த்தியங் கூறுவதும் நாள்களில்நசல்

நீடிப்பதும்- பகைப்பாமனிதரு மிதுகளோர்தும் பாரில்மனிதற்
குழுசியத்தாகும் - தொகுப்பாயிலதை அக காபிகட்குத் தய்யற
குஇல்லா மொழிந்தனரே (௱௨)

அஞ்சகாரியமாகிறத்தில் அதிகமுசீபத்தாயிருக்குமது- அஞ்சநெரு
த்திலும் இமாமுடனே அந்தத் தொழுவதைத்தப்புவதும் செஞ்
சிக்கேட்போனை விரட்டுவதும் கிருபையுள ஆலிமவுத்ததுவும் அஞ்
சில்சக்காத்தினை விலக்குவதும் மன்னைபிதாவைத் தூசணிப்பதுமே ( )

நல்நபிமார்கள் வண்ணிப்பைக்கேள் நசலேமிடிமையைப்
பயப்பட்டார்கள்-வல்லவொருகல்க்கைப் பயப்படார்கள் மவுத்
தைப்பசியைத்தான்பயப்பட்டார்கள் - நல்லோர்கள்குண மிது
வேயாகும் நாளையியாமத்து நாளையிலே- எல்லாருமொன்றாய்ச்
சுவர்க்கத்திலே இருப்பார்விகாலையும்பெறுவார்களே (௱௪)

பாகையின் முந்நூற்றறுபதின் மேல்பயகாம்பர்மாரிக்கம் வ
ந்த, நெல்·காதலுடனிதின்படி நடந்தோர்கலாசுபெறுவார்கள் நட
கம்விட்டு நீதமாகியதாயனுடதிறைந்தகுணமுந்நூறுண்டதுகேள்
வேதாம்பரால நபியிறசூல்வெளிச்சமாயிலதை விளம்பலுற்றார் ( )

எழுவானத்துமலக்கைப்போலே இறையையவணங்கிலுமில்லா
தோர்-நாளையியாமத்து நாளையிலே நட்டவாளராயிருப்பார்களெ
ன்தோழமார்களே இஸ்மானது தொழில்களிலே சாயிருக்குமாறுல்
எழைபரமாற்றமெல்லோருந்தான் இஸ்மாளியாவாரென்றறிவே ( )

அஞ்சகாரியம்வன்னெஞ்சர்க்கும் அதனாலேதானே யீமானின்று
முஞ்சிப்பாவத்தைச்செய்வதுவுமிருந்துதின்பதுமந்நிதமும் அஞ்
சு நேரத்துத் தொழுகைதன்னை அவ்வலொருத்தைப்பிற்படுத்துவ
ம்கஞ்சிச்சாறு தானிடதுகையாற்காபிறைப்போலேதின்பதுமே
கட்டுப்பாடானதண்ணீரிலுங்களைந்தசாம்பலின் பேரிலேயுமிட்
டமுடன்சிறுநீர்பெய்வதும் எலியின் எச்சியைத்தின்பதுவும் வெட்
டிப்பட்டோனைப்பார்ப்பதுவும் வேறேகளுயிலேபார்ப்பதுவும் இ
ட்டமுடனி துமறநிதன்னைத்தினமும் வருத்துமென்றுரைத்தனரே

நெஞ்சவொளிவாறுமைந்து கொண்டு நித்தம் குறுஆனையோ
துவதும் - கொஞ்சந்தின்பதும் ஆலிமுடன் கூடியிருப்பது மிக
லையிலே- தஞ்சிமுழித்துத்தான் தொழுவதுவும் சுறகின் ஆமானை
தைத்தின்பதுவும் - அஞ்சையுங்கொண்டு அகத்திலுள்ள அழகான
கல்புவொளிவாகுமே (௱௯)

நாயன் திருவுளமுசாவுக்கு நமக்குப்பொருத்தமாயென்ன அ
மல்தாயிமாக நீர் செய்திரென்றதயவாகக்கேட்கமுசாசொல்வார்

நாயனேயுனக்காய்த்தொழுதேன் துய்ய அமல்களை மிகவுஞ்செய்
தேன்-காயமதுகடந்தேறவுநீர்காட்சிபெறவுநல்லமல்செய்தீரோ(

அழுகைமிகுதமா யழுதழுசா அதனையறிவிப்பா யெனக்
கேட்டபின் - பழுதுவராமலே தாகித்தவன் பசித்தோன் பசிதா
பந்தீர்த்ததுண்டோ- ஒழுகாகவந்த விருந்தாளியை உலமாக்களை
ச்சங்கைசெய்ததுண்டோ - எளியோர்க்குமானங் கொடுத்தது
ண்டோஎன்றுஇறையவன்கேட்டனனே (௱௰௧)

அஞ்சகாரியங்கொண்டுவஞ்சி வருமென்றுஆலநபிமொழிந்
தார் - பஞ்சம்பசைமிடிமைமவுத்துப் பருந்துளிமழை பெய்
யாததும் - கொஞ்சமளவிலே குறைப்பதாலுங் கோமானதுதி
யைமுறிப்பதாலும் - பஞ்சத்தார்சொலும் நியாமது படைத்
தோன்வேதத்தின்மாற்றத்தாலும் - மிஞ்சிசகுவெளி யாவதாலு
மேலோன்சக்காத்தினை யிறுக்காதாலும் - அஞ்சியிதுகளைத் தவி
ர்ந்தோரெல்லாம் அழகானஅமல் செய்தவரோ (௱௰௨)

நெடிகிலும்வாறுல் நீளிக்குமே நிறைந்தகாரியமைந்துண்
டாறுல் - குடல்வாய்ச் சனத்தைச் சேர்ந்திருப்பதுவும் குணமா
ய்த்தந்தைதாய்க் குபகாரமும்-கொடையைாகசிய மாக்குவதும்
குதாவையிரவையித் தொழுவதுவும்-நெடியோ னிடத்தினில் து
வாச்செய்வதும் நிறைந்ததுகொண்டு நீடிக்குமே. (௱௰௩(

மூசலீம்ளகூதிநசாருவிந்தமூன்றுபேருக்குமூவ்மையறி- அகலி
லெகூதிதவுருத்தைக்கொண்டுஅமல்செய்துவந்தான் மதியமட்டு
ம்-கசலாய்ப்போனபின் வன்னசாருகடிசாயமல்செய்தானசறு
மட்டும்- இசுலாமானவர்பொழுதுமட்டும்இறந்து இருவர்கூலி
யும்பெற்றுரோ (௱௰௪)

ஓர்மையெனுந்தெளிவில்லாதவர்ஒருபோதும்நெட்டைய
றியமாட்டார்-தீர்மானமானமூத்தவியும்தெளிந்தகுபியுஞ்சித்திக்
கையும்-சார்மானமான மூத்தக்கீனும்காயிலாகியசெய்குமாரும்
சேர்மானமானவாசிலீனும் செவ்வொத்த பாதையில்நடந்தார்.

இருமை யெனுஞ் சிறுக்குள்ள வன்றான் இறையை யொரு
போதுமறியமாட்டான் - பெருமையார்ப்புமட் டுள்ளவன்றான்
பெரியநாயனை யறியமாட்டான் - குருவினுபதேசத் தனைமறந்
தோன் குதாவையொருபோது மறியமாட்டான் - அருமையுரி
மையுங் கருணையுள்ள அருமைநபி யருளிச்செய்தார் (௱௰௫)

வல்லவொருமங்கை யைத்தொழுதும் வணங்கித்தொழுது
நோன்பும்பிடித்து - நல்லமுதற்குச்சக் காத்தழித்தும் நாடிமக்
கத்தில் கச்சஞ்செய்து- அல்லும்பகலுந்தான் புருஷனுக்கு அத
பாய்வழிப்பட்டு நடப்பாளென்னில் - செல்லுஞ்சுவர்க்கங்களெ
ல்லாத்தையுஞ் சேர்ந்துசிறப்பாக இருப்பளென்றார் (௱௰௭)

நாயன்பொருத்தத்திலுள்ளதுதான் நல்லகணவன்றன்பொருந்தி
னது தாயுந்தகப்பனும்பொருந்திறதுதனிமேயான் பொருத்தத்தி
லுள்ளதாகு -மாவில்லாதவன் கோபமதுமனிதரில்மூன்று பேர்
கோபமும்-போகாதேயிந்தப்பொருந்தங்களைப்பூணுதவர் வண
ங்காதவரோ (௱௰௮)
புருஷனுக்கொருநாளையிலே பெருத்தர்மாகவேநடக்கிறதுவரு
ஷிமடங்களும்வணங்கிறத்தில்வலுப்பமாகவேயிருக்குமென்றும்
பிரிசம்வரத்தானேநடக்கிறதுபெரியவணக்கமாயிருக்கு மென்
றும்அரசாகியநூலநபிநூலத்தோர்க்கெல்லாமருளிச்செய்தார்()

வல்லவொருமங்கைபுருஷனுக்குவழிப்பாடொருசாஅத்தா
கிலுந்தான்- நல்லஅவர்க்கத்தைக் கண்டேயல்லால்நாயனவன்று
கைப் பிடிக்கமாட்டான் - இல்லந்தனிலேதா னிருந்துகொண்டு
இணையன்படைவைநூல் நூற்றாளாகில்-அல்லாஅவளுக்குச் சுவர்க்
கந் தன்னை ஆகிறந்தனிற் கொடுப்பானென்றார் (௱௨௰)

கணவனில்லாததோகையர்தான்கதவுஇல்லாதவீடுபோலாம்- து
ணைவனில்லாத தோகையர்தான் தூவலில்லாதபறவைபோலா- ம
ணமாய்ப்புருஷனைப்பொருந்தமாக்கி மவுத்தாலவள்மவுத்து
க்குப்பின்- கணக்குக்கேள்வியுமில்லாமலே சத்தோன்சுவர்க்கத்
தைக்கொடுப்பானென்றார் (௱௨௧)

உள்ளமையானமவுருதுநீஉன்னையல்லாதுவேறில்லையே-தன்னைத
ந்தைதயைக்காணயிகத்தனதாய்க்கிருபையையுடையவனேபிள்ளை
பயப்பட்டாற் றள்ளையைப்போற்பேணிக்கிருபைசெய்வாருமு
ண்டோ-கொள்ளைதோய்பலாய்முசிபத்தெல்லாம்குடிகளைவிட்டு
தூராக்குவாய் (௱௨௨)
இசுலாமார்க்கத்திலேந்தாவது இயல்புள்ளோர்க்குத்தான்கச்சுவிதி
நசலாய்வயதிரு லெல்லாதவர் நாயிடைக்கொண்டு கச்சுசெய்வார்
கசலாகக்கச்சைவிட்டவர்க்குக் கடிசாய்சதீதினில்வந்தவருல் - இ
சுலாமாவது இருபதியில் இசுலாமார்க்கத்தை யெடுத்தவர்க்கே()

உருறுவைத்தேடிகச்சுசெய்தோர்உவப்பாய்த் தொழுதமால்சக்
காத்துமீவார்-பருறும்முதல்வினில்செலவழியார்பவுசுபெறவே
ண்டிகச்சுசெய்வார் இருறுமுகூ புத்தவாயும்இந்தப்பராஞ்டன்ச
ருபிங்கல்கும்-தகுறாய்ச்செய்தால் ஒருபறபாத் தவிசவுள்ளது
வும். (௱௨௪)
விதியானகச்சு விசையமாகவேணும்சுறுத்தைத் துஉண்டதுகேள்
மதியுமிசுலாமுப்புஞக்குடனேமனிதன்சத்தியும் நாட்டாமையு
ம்பொதியும்ஒருத்துப்புஞக்கும்பொருத்தமுள்ளநாட்டான்மக
னென்பதும் சத்தியும்இந்தவைந்துங்கொண்டு சரீஅத்துகச்சுவி
தியாகுமே (௱௨௫)
இலிபமாந்தர்களிறையைக்கொண்டுநமான்கொண்டபின்பிசுலா
மாகுேன்மனிதரித்சத்திபெற்றவர்கள்மக்கத்தில்கச்சுச்செய்வார்
களைகொஞ்சமுதல் நிசாபேற்றிறுஇம்குப்புடன் சக்காத்துங்
கொடுப்பன்பஞ்சையாகியமுசுலிப்பேரிற்பறுஉந்தொழுகையு
நோன்புமாமே (௱௨௬
எல்லாநாயன்றன் செயலென்றவன் எல்லார்பேரிலும்பொ
ருத்தம்வைப்பான் அல்லாஎவற்குமாற்றஞ்செய்தால் அவுலியா
க்களும் கோபமாவார்- வல்லவொருத்தன்மேற் கோபமானால் வ
லியான்செயலைக்கா ணுதவனே- நல்சரீ அத்தைத் தொடர்ந்
ததற்பின் நாயன்செயலென்பார் நல்லோரெல்லாம் (௱௨௭)

பள்ளிதனில்வந்துபல்நாளிலும்படைத்தநாயனைத் தொழுகிறவ
ன் - வெள்ளிக்கிழமைசும்ஆத்தொழுகை விட்டோன்முனுபிக்கா
மலனுடனேகள்ளனிபுலீசுகலே விலாகிக்காவிக்கை வணங்காதவ
ன்றன் உள்ளமுமானுங்கொள்ளைபோகும் ஒடுக்கநரகத்திற்சேரு
வானே (௱௨௮)
தொழுகைதனிலுள்ள பறுஉகளைத் தொகுத்து அறியாதா
ர்தொழுந்தொழுகை- பழுதாகப்போகும் பலநாளிலும்படைத்
தநாயனைத் தொழாதவர்கள்- கழுதைநாயிலும் பன்றியிலும் கை
வாணடக்கல்குநீட்பானதாற்- சூழியிலதாலையு மனுபவித்
துக்கொழுந்திட்டெரிகிற நாகஞ்சேர்வார் (௱௨௯)

அடிமைத்தனத்துக்குத் தீக்ஷையில்லை அடிமையொருபோ
தும்நாயனுகான் - கொடுமையடிமைநானுயனென்றுத் கொடிய
காபிராங் காறானைப்போல் - அடிமையுடையோர்க்கு முடிவுமில்
லை அவனுமொருபோது மடிமையாகான் - மிடிமைதிரம்பிறு
லடிமையாவான் மிகவும்தனதாகு மல்லாவுக்கே (௱௩௰)

அஞ்சுதொழுகைக்கும் பதுலாவது ஆறுநாற்பதி லொன்று
குறை- அஞ்சிப்பயந்துதான் தொழுகிறவன் அறுக்கான்சறுத்தி
லையறியாதவன் - மிஞ்சியமல்களைச் செய்தாகிலும் மீட்சிபெற
மாட்டானொடுக்கத்திலே - எஞ்சாணுடம்புக்குஞ்சிரசுபோல இ
றையோனைத்தொழுந் தொழுகைதானே (௱௯௧)

அறபுப்பாஷையிற் குறைச்சலானோன் அறிவியையறியாத
வன்சொற்-சிறப்பாகஇதைப் பார்த்தபேர்க்குச் சேர்ந்தசொற்
களைக்சேர்க்கவேணும் - வெறுப்பானபேர்கள் சேர்க்கமாட்டா
ர் விகற்பமாகவே பேசுவார்கள்- துறப்பானதினாலே யிதின்மஃ
நாத் தோன்றுமானுக்கும் பெண்ணுக்குமே (௱௯௨)
எல்லாப்படைப்புக்குமேற்றமாகளங்களிறசூலைநீபடைத்தாய்நல்
லழகியித்தினைப்துல்காதிர்நபிசிற்ருகவேவந்தவர்பேர் - சொல்
லாலிவர்கள்பே ரிட்டதனாற் சொரிவாய்றகுமத்தை யாறபீமே-
வல்லோன்சலவாத்துஞ்சலாமுடனே வரிசைநபியுல்லாமேற்புரி
வாய் (௱௯௩)

நாலியார்கட்குங் கிளையாருக்கு நல்லஅசுகாபி மார்களுக்கு
ம்-நாலிமாமுக்குந் தொடர்ந்தபேர்க்கும் நாலியார்களைத்தொ
டர்ந்தபேர்க்கும் - நாலுவேதத்தை யுடையபேர்க்கும் நா
லுபேரையுந்தொடர்ந்தபேர்க்கும் - ஆலுக்குந்தோழமார்களு
க்கு மனைவர்க்குமறகு மத்தருள்வாய் (௱௯௪)

சரீஅத்தின்படி நடந்தவர்கள்ஜன்னத்திலவர்வீற்றிருப்பார் சரீ
அத்தின்படிநடந்தவர்கள்சகல பாக்கியம்பெற்றுக் கொள்வார்ச
ரியானகஷீக்கத்துடையோர் சமதானேனளவிற்சேருவார்- அரிய
மகரிபாத்தனையுடையோர் அவர்தான்காமீலென்றறிந்துகொள்
வாய் (௱௯௫)

சரீஅத்துடன்மூன்றுக்கும்முவமை சாற்றுந்தொலிதகை யெ
ன்புமூளை - சரீஅத்தெனுந்தொலி யில்லாவிட்டாற் றகைமூளை
யென்புதானிற்குமோ-சரியானநபியின் னுஞ்சொன்னார்சலாபத்
தோணியுங்கடலுஞ்சுப்பி- புரோசனமுள்ளமுத்துப்போலுமெ
ன்றுபுகழுள்ள றசூல்மொழிந்தார் (௱௯௬)

இந்தச்சரீ அத்து மாலைதனை இயல்பாய்ப்பாடினோர் பா
ர்த்தபேர்க்கும் - சுத்தமாகவேபடிப்பவர்க்குஞ் சங்கையுடன்மி
கக் கேட்பவர்க்குந்-தந்தன்பொருள்போலப் பேறுவோர்க்கு
ஞ்சகலநிறைபாடுஞ்சுவர்க்கவாழ்வுந்-தந்திரகுமத்துச் செய்தரு
ள்வாய் தருகிப்பெரியோனே யாறபீமே (௱௯௭)

சரீ அத்து மாலை

முற்றிற்று.